# மத்தியகாலத் தமிழ்நாட்டு இந்துக்கோயில்கள் - தொழில் நிறுவனங்கள்

செல்லத்துரை குணசிங்கம்
வரலாற்றுத்துறை,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை வளாகம்.

மத்திய காலத் தமிழ்நாட்டு இந்துக் கோயில்களின் அமைப்பு, அவற்றின் தொழிற்பாடுகள் ஆகியவை பற்றிக் கவனிக்கையில் அக்கோயில்கள் அவற்றின் அமைப்பாலும் தொழிற்பாடுகளிலும் உச்சமடைந்த காலம் சோழப் பெருமன்னர் காலம் எனக் கொள்ளலாம். பல்லவர்காலம் தமிழ்நாட்டு வரலாற்றிற் கோயில் கட்டும் முயற்சியைப் பொறுத்துத் தொடக்க காலமாக இருந்தது. பெரும்பாலும் பல்லவர் காலத்தின் பெரும்பகுதியில் அளவிற் சிறிய கோயில்களே அமைக்கப்பட்டன. இதனுல் இக்கோயில்களின் தொழிற்பாடுகளும் குறைவாகவே காணப்பட்டன. சோழர் காலத்திற் பல்லவர் காலக் கலைமரபின் வளர்ச்சியாகப் பெருங் கோயில்கள் பல தோற்றம் பெற்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட பெருங்கோயில்கள் அவற்றின் பொருள் பலத்திலும் தொழிற்பாடுகளிலும் உச்சம் பெறுவதற்குப் பல காரணிகளின் ஒன்றிணைவே காரணமாகும். பக்தியியக்கம் கொடுத்த பெரும் சமயவுணர்வு நாட்டில் ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடு, நாட்டின் பொருளாதாரச் செழிப்பு ஆகியவைகளே நாம் கருதுகின்ற காரணிகளாகும். சங்க மருவிய காலத்தின் (கி பி. 3–ஆம் நூற்ருண்டு தொடக்கம் கி பி. 6–ஆம் நூற்ருண்டுவரை) பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பக்தியியக்க நடவடிக்கைகள் பல்லவர்கால முழுப் பகுதியிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. .இதனுல் இப்பக்தியியக்கம் பல்லவர் காலத்தில் எத்தகைய பெருவிளைவினையும் ஏற்படுத்த முடியவில்லை. பக்தியியக்க நடவடிக்கைகளினுல் பல்லவர் காலத்திலேயே தமிழ் நாட்டிற் பல கோயில்கள் தோற்றம் பெறமுடிந்தாலும் அக்கோயில்கள் மக்கள் வாழ்வோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள முடியவில்லை. பக்தியியக்கத்தின் பெருவிளைவினைப் பல்லவர் காலத்தையடுத்து வந்த சோழர் காலத்திலேயே பெரிதும் காண முடிகின்றது. இவ்விளைவு அரசு, மக்கள் வாழ்க்கை, கோயில் நிறுவனம் ஆகியவற்றுக் கிடையிலான தொடர்பினை இதற்கு முற்படத் தமிழ்நாட்டில் என்றுமில்லாதளவிற்கு இறுக்கமாகப் பிணைத்தது. இதனைவிட, வலிமையுள்ள மன்னர்கள் சோழப் பேரரசிலே தொடர்ந்து சிலகாலப் பகுதியாகப் பதவி வகித்தமையால் சோழப் பேரரசில் அரசியல் உறுதிப்பாடும் அமைதியும் ஏற்படுவதற்கான சூழ்நிலை நன்கமைந்திருந்தது. அத்துடன், சோழப் பெருமன்னர்கள் இக்காலமளவில் மேற்கொண்டிருந்த ஏகாதிபத்திய நடவடிக்கைகள், பிறநாடுகளுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள், அமைதியான சூழ்நிலையில் வணிகக் கணங்கள் எழுச்சி பெற்றுப் பரந்தளவில் அவை மேற்கொண்ட வணிக முயற்சிகள் ஆகியன நாட்டில் பொருளாதாரச் செழிப்பு ஏற்படுவதற்குத் துணைநின்றன. ஆகவே, நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் செழிப்பு, அரசியல் வசதிப்பாடு, பக்தியியக்கத்தின் பெருவிளைவினுல் ஏற்பட்ட சமயவுணர்வு ஆகியவற்றின் கூட்டு இணைவே, இக்கால இந்துக் கோயில்கள் பல்வேறு அம்சங்களிலும் உச்சம் பெறக் காரணமாகியது.1

## 1. பணியாளர்

கோயில்களின் அமைப்பின் அளவும் அவற்றின் வருமானமும் முன்னர் இல்லாதளவிற்கு அதிகரித்தபோது அக்கோயில்கள் பல்வேறு விதமான தொழில்களையும் செய்யக் கூடியனவாக இருந்தன. சிறிது விரிவாகக் கூறுவதாக இருந்தால் குறிப்பிடத்தக்க சமய நிறுவனங்களாக விளங்கிய இக்கால இந்துக்கோயில்கள் தமக்கே இயல்பாக அமைந்த சமயக் கடமைகளோடு உலகியல் சார்ந்த கடமைகளையும் செய்து வரலாயின. அவை பல்வேறு விதமான சமய விழாக்களை நடாத்தி வந்தமை மாத்திரமன்றி மக்களின் நல்வாழ்வும் நாட்டு முன்னேற்றமும் கருதிப் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தன.

இத்தகைய நடவடிக்கைகளைக் கோயில்கள் திறம்படச் செயலாற்றுவதற்கு அவற்றிற்கு அதிகமான வேலையாட்கள் தேவைப்பட்டனர் இந்த விதத்தில் இக்கோயில்கள் பலருக்குத் தொழில் வாய்ப்புக் கொடுக்கும் நிறுவனங்களாக இருந்து வந்தன இதற்கு ஒரு சிறந்த உதாரணம் முதலாம் இராஜராஜனால் அமைக்கப்பட்ட தஞ்சாவூர்ப் பெரிய கோயிலாகும் இங்கு ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட வேலையாட்கள் பணி செய்தனர் என்பதனைக் கீழ்க்கண்ட பட்டியலினால் அறியலாம்.2

| வேலை பெற்றோர் | தொகை | ஒவ்வொருவருக்கும் சம்பளம் |
|---|---|---|
| 1. நடனமாதர் | 400 | 1 வேலி நிலம் 1 வீடு |
| 2. நடன ஆசிரியர் | 12 | $1\frac{1}{2}$ – 2 வேலி நிலம் |
| 3. பாடுவோர் | 05 | $1\frac{1}{2}$ வேலி நிலம் |
| 4. குழல் வாசிப்போர் | 07 | $1\frac{1}{2}$ ,, ,, |
| 5. தவில் அடிப்போர் | 02 | $1\frac{1}{2}$ ,, ,, |
| 6. புல்லாங்குழல் வாசிப்போர் | 02 | $1\frac{3}{4}$ ,, ,, |
| 7. வடமொழியில் பாடுவோர் | 03 | $1\frac{1}{2}$ ,, ,, |
| 8. தமிழில் பாடுவோர் | 04 | $1\frac{1}{2}$ ,, ,, |
| 9. பெரிய தவில் வாசிப்போர் | 03 | 1 ,, ,, |
| 10. சங்கு ஊதுவோர் | 02 | 1 ,, ,, |
| 11. பக்சவாத்தியம் செய்வோர் | 05 | $\frac{3}{4}$ ,, ,, |
| 12. சந்தர்வ சங்கீதம் படிப்போர் | 0[illegible] | $\frac{3}{4}$ ,, ,, |
| 13. மேளம் அடிப்போர் | 01 | $\frac{3}{4}$ ,, ,, |
| 14. பாடகர் குழு | 16 | $\frac{3}{4}$ ,, ,, |
| 15. திவோய்க் கேள்வி | 05 | 1 ,, ,, |
| 16. கோயிற் பெண்களையும் இசைவல்லாரையும் மேற்பார்வை செய்யும் அதிகாரி | 02 | 2 ,, ,, |
| 17. கணக்காளர் | | 2 ,, ,, |
| 18. கணக்காளரின் கீழ் பணிபுரிபவர் | 04 | 2 ,, ,, |
| 19. தவில் அடிப்போர் | 66 | $\frac{3}{4}$ ,, ,, |
| 20. பல்லக்குச் சுமப்பவன் | 01 | $\frac{1}{2}$ ,, ,, |
| 21. பல்லக்குச் சுமப்போர் | 10 | 1 ,, ,, |
| 22. விளக்குக் கொழுத்துபவன் | 01 | $\frac{8}{20}$ ,, ,, |
| 23. விளக்குக் கொழுத்துவோர் | 07 | 1 ,, ,, |
| 24. தண்ணீர் தெளிப்போர் | 04 | 1 ,, ,, |
| 25. கணுவியர் | 02 | $\frac{1}{2}$ ,, ,, |
| 26. குயவன | 01 | $\frac{3}{4}$ ,, ,, |
| 27. குயவர் | 10 | $\frac{3}{4}$ ,, ,, |
| 28. வண்ணார் | 02 | $\frac{8}{20}$ ,, ,, |
| 29. சிகை அலங்கரிப்பவர் | 02 | 1 ,, ,, |
| 30. காவிதி | 02 | 1 ,, ,, |
| 31. சிகை அலங்கரிப்போன் | 01 | $\frac{1}{2}$ ,, ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. வானசாஸ்திரி | 06 | $\frac{1}{2}$ | ,, | ,, |
| 33. தையல்காரர் | 02 | 1 | ,, | ,, |
| 34. நடை செய்வோன் | 01 | $\frac{1}{2}$ | ,, | ,, |
| 35. பித்தளை செய்வோன் | 01 | 1 | ,, | ,, |
| 36. தலைமைத் தச்சன் | 01 | $1\frac{1}{2}$ | ,, | ,, |
| 37. உதவித் தச்சன் | 04 | $\frac{3}{4}$ | ,, | ,, |
| 38. பாணன் | 04 | $1\frac{1}{2}$ | ,, | ,, |
| 39. தட்டார்களின் மேலதிகாரி | 01 | 1 | ,, | ,, |

மேலே காட்டப்பட்ட தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைச் சேர்ந்த பணியாட்களின் பட்டியல் இக்கால இந்துக் கோயில்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானதாக அமையும் எனக்கொள்ள இயலாது. அதாவது இக்கால இந்துக் கோயில்கள் எல்லாவற்றிலும் தஞ்சாவூர்க் கோயிலிலிருந்த வேலையாட்களின் எண்ணிக்கையே இருந்தது என்றோ அதற்கு மேற்பட்ட தொகையினர் இருந்தனர் என்றோ கொள்ள முடியாது. பெரும்பாலும் கோயில்களின் அளவுக்கேற்பவும் அக்கோயில்கள் மேற்கொண்டிருந்த பல்வேறு கடமைகளுக்கேற்பவும் அக்கோயில்களில் பணியாற்றியோரின் தொகையும் கூடியும், குறைந்தும் இருந்திருக்கலாம் ஆனல், மேற்கண்ட பட்டியலில் இருந்து பல்வேறு தொழில்களையும் செய்வதற்குப் பலவகைப்பட்ட தொழிலாளர் கோயில்களில் அமர்த்தப்பட்டனர் என அறியலாம்.

தற்போது சென்னைத் தொல்பொருட் காட்சிச் சாலையிலுள்ள உத்தம சோழனின் (கி. பி 970—985) காலத்துக்குரிய சாசனம் கோயில் ஒன்றிற் பணிபுரிந்த சிலர்பற்றிக் குறிப்பிடுகின்றது.3

| பணியாள் | கூலி 1 நாளுக்கு | 1 ஆண்டுக்குப் பொன் |
|---|---|---|
| 1. ஆராதிக்கும் வேதபிராமணன் | 1 பதக்கு | 5 கழஞ்சு |
| 2 பரிகாரஞ் செய்யும் மாவி | 6 நாழி | 1 கழஞ்சு |
| 3. திருமெய்காப்பான் | 1 குறுணி | 2 கழஞ்சு |
| 4. நந்தாவனம் திருத்தும் இருவர் | 1 குறுணி 4 நாழி | 1 கழஞ்சு |
| 5. தலைப்பறை கொட்டும் ஒருவர் | — | |
| 6. மத்தளிக்கு ஒருவர் | — | |
| 7. காடிகைக்கு ஒருவர் | — | |
| 8. தாளத்துக்கு ஒருவர் | ஒன்பது பேருக்கு 180 காடி நெல் | |
| 9. செகண்டிகைக்கு ஒருவர் | — | |
| 10. காளத்துக்கு ஒருவர் | — | |
| 11. கைமணிக்கு ஒருவர் | — | |
| 12. திருமெழுக்கிடுவார் | 3 நாழி | |
| 13. சிவிகைகாவுவார் | 7 நாளைக்கு 1 கழஞ்சு | |
| 14. விளக்குப் பிடிப்பவர் | அரிசி 1 தூணி | |
| 15 கொடி எடுப்பவர் | அரிசி 1 நூணி | |
| 16. கணக்கு எழுதுபவன் | — | |

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மாயவரம் தாலுகாவைச் சேர்ந்த குற்ருலம் என்ற இடத்திலிருந்து கிடைக்கின்ற முதலாம் இராஜராஜனின் காலத்துக்குரிய சாசனமொன்று, சொன்னவாரறிவார் கோயிலிற் பணியாற்றியோர் சிலர் பற்றிய செய்திகளைத் தருகின்றது. சாசனம் பழுதடைந்துள்ளமையால் அதிலிருந்து முழுத் தகவலையும் பெறமுடியவில்லை. எஞ்சியுள்ள பாகத்திலிருந்து தேவையான பின்வரும் தகவலைப் பெறலாம்.4

1. திருப்பதியம்
2. திலவகாரசாமவேதம்
3. தைத்திரியவேதம்
4. சந்தோக சாமவேதம்

இவற்றைப் படிப்பதற்காக இருபத்தைந்து பிராமணர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

| | | |
|---|---|---|
| 1. | ஆழ்வாரைத் திருவாராதனை செய்யும் பிராமணன் | — ஒருவன் |
| 2. | திருவமுது அட்டுவான் | — ஒருவன் |
| 3. | திருமஞ்சன நீர் சுமப்பவன் | — ஒருவன் |
| 4. | திருவாராதனை செய்யும் நம்பி | — ஒருவன் |
| 5. | விதானம் பிடிப்பவன் | — ஒருவன் |
| 6. | திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்போர் | — மூவர் |
| 7. | திருவலகிட்டுத் திருமெழுக்கிடுவோர் | — மூவர் |
| 8. | திருமெய் காப்பவர் | — இருவர் |
| 9. | கரணத்தான் | — ஒருவன் |
| 10. | ஸ்ரீகாரியஞ் செய்பவன் | — ஒருவன் |

இக்காலக் கோயில்கள் மேற்கொண்டிருந்த பணிகளுள் அவற்றின் கல்விப் பணியும் ஒன்றாகும். குறிப்பாகச் சில கோயில்கள் அதிகளவிலான மாணவர்களைக் கொண்ட கல்லூரிகளை வைத்திருந்தமையினால் அங்கு கல்வி புகட்டுவதற்குப் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். உதாரணமாக எண்ணாயிரம் என்ற இடத்துக் கோயிலைச் சேர்ந்த கல்லூரியிற் கடமை செய்த ஆசிரியர்களைக் குறிப்பிடலாம்,5

| | | |
|---|---|---|
| 1. | யஜுர் வேதம் கற்பிப்பதற்கு | — 3 பேராசிரியர்கள் |
| 2. | சந்தோக சாமவேதம் கற்பிப்பதற்கு | — 1 பேராசிரியர் |
| 3. | தலவகள சாமவேதம் கற்பிப்பதற்கு | — 1 பேராசிரியர் |
| 4. | வாஜஸனேயம் கற்பிப்பதற்கு | — 1 பேராசிரியர் |
| 5. | பௌத்தாயனீயம் கற்பிப்பதற்கு | — 1 பேராசிரியர் |

சில கோயில்கள் வைத்திய மனைகளைப் பேணியபோது அவ்வைத்திய மனைகளிலும் பலர் தொழில் செய்தனர். உதாரணமாகத் திருமுக்கூடற் கோயில் வைத்தியசாலையிற் கடமை செய்தவர்களைக் காட்டலாம் 6

| | உத்தியோகத்தர் | | கொடுக்கப்பட்ட சம்பளம் |
|---|---|---|---|
| 1. | வைத்தியம் செய்பவன் | — | 1 நாளைக்கு 3 குறுணி (90 கலம்) 8 காசு |
| 2. | சத்திர சிகிச்சை செய்பவன் | — | 3 குறுணி |
| 3. | பரியாரம் பண்ணுவோர் | — | 1 குறுணி நெல், 1 காசு |
| 4. | பரியாரம் பண்ணி மருந்திடும் பெண். | — | 4 நாழி (15 கலம்) அரிசி $\frac{1}{2}$ காசு |
| 5. | நாவிசுன் | — | 3 நாழி நெல் |
| 6. | ஈரங்கொல்லி | — | 4 நாழி |
| 7. | குசவன் | — | 1 குறுணி |
| 8. | திருமெய்காவல் | — | 4 நாழி நெல், 1 காசு |

கோயில்கள் அமைக்கப்பட்ட பின்னர் அவை பெரும் நிறுவனங்களாகச் செயற்படத் தொடங்கிய காலத்தில் அவற்றிற் பணிபுரிந்த சில பணியாளரை இதுவரையிற் கவனிக்க முடிந்தது. இதனைத் தவிர, இன்னோர் விதத்திலும் கோவில்கள் பலருக்கு வேலைவாய்ப்பு அளித்தன. கோயில்களின் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அவை பூர்த்தியாக்கப்பட்ட வரையுள்ள காலப்பகுதியிற் பெருந் தொகையான பணியாளர் கோயில்கள் அமைக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். தமிழ்நாட்டிற் சோழப் பெருமன்னர் காலத்திலேயே பெருங்கோயில்கள் அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு பெருங்கோயில்கள் அமைக்க ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் கட்டிட வேலைகள் பூர்த்தியாவதற்குப் பல வருடங்கள் தேவைப்பட்டன. இக்கோயில்கள் ஒவ்வொன்றையும் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு தொழிலாளர் ஈடுபடுத்தப்பட்டனர் எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் கோயில்களின் அமைப்பளவு, கோயில்களின் பல பாகங்களிலும் காணப்படும் சிற்பக்கலை, ஓவியக்கலை, ஆகியவற்றின் தொழில் நுட்பங்கள் என்பவற்றைக் கொண்டு பல தொழிலாளர் கோயில்களைக்

கட்டிமுடிக்க ஈடுபடுத்தப்பட்டனர் எனலாம். இதுபற்றி நீலகண்டசாஸ்திரி அவர்கள் கூறியிருப்பதனையும் நோக்கலாம்.

'' தலைநகரினதும் பேரரசினதும் பொருளாதார அமைப்பிலே தஞ்சாவூர்ப் பெரியகோயில் பெற்றிருந்த முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல. பல்லாண்டுகளாக அதன் கட்டிட வேலைகள் நடைபெற்றபோது நாட்டிலுள்ள போது ஊழியர் பெருந்தொகையானோர்க்கும் மிகத் திறமை வாய்ந்த கட்டிட வினைஞருக்கும் சிற்பிகளுக்கும் கோயில்வேலை வாய்ப்பினை அளித்திருக்கவேண்டும். கவர்ச்சிகரமான கதைகளை விளக்குகின்ற தோற்றங்களையுடைய தொடர் நிலைச் சிற்பங்கள் உட்படப் பெருமளவிலான படிமங்கள் பற்றிய விரிவானவையும் மிகப்பொருத்தமானவையுமான வர்ணனைகள் உலோகவார்ப்புக் கலையில் அடைந்த திறமைக்கும், கலை ஆற்றல் வாய்ந்த கரும வினைஞர் தொடர்ச்சியானதும் லாபகரமானதும் தொழில் வசதி பெற்றிருந்தமைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாக அமைகின்றன. படிமங்களுக்குச் சூட்டப்பட்ட நகைகள், அலங்காரங்கள், ஆகியவை பற்றிய அதிகளவிலான முழுமையான, நுண்மையான குறிப்பு, பொற்கொல்லரின் உன்னதமான கலைத் திறனையும் செல்வவளம் பொருந்திய பெருங்கோயில் அக்கலைக்கு அளித்த ஆதரவின் அளவையும் காட்டுகின்றது. உண்மையிலேயே அதனிற் பெரியனவாகவும், சிறியனவாகவும் உள்ள பிறகோயில்கள் எல்லாம் தத்தம் சுற்றுடலைப் பொறுத்தவரையில் பெருங்கோயிலைப் போன்றதான நிலையினைப் பெற்றிருந்தன. அவற்றுக்கும் பெருங் கோயிலுக்கும் உள்ள வேறுபாடு அளவினைப் பொறுத்தது.'' [7]

## II. பணியாட்கள் யாருக்குப் பொறுப்பாக இருந்தனர்?

பொதுவாக மத்திய காலத்து இந்துக்கோயில்களின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிக் காலத்துக்குக்காலம் கவனித்தோர், இந்துக் கோயில் நிறுவனம் தொழில் செய்விப்போனாக விளங்கியது எனக் கூறியுள்ளனர். இதுசம்பந்தமாக ஆங்கிலத்தில் ''எம்பிளோயர்'' (Employer) எனப்படுகின்ற சொல்லையே அவர்கள் கையாண்டுள்ளனர்.[8] இவ்வாறு அவர்கள் கையாண்டுள்ளமைக்குக் காரணம் மேலே கவனித்தது போலக் கோயில் நிறுவனம் சிலருக்கோ பலருக்கோ வேலைவாய்ப்பு அளித்தமையாகும். இது சம்பந்தமாக ஆராய வேண்டிய விடயங்கள்:

(1) ஒரு நிறுவனம் சிலருக்கோ பலருக்கோ வேலைவாய்ப்பு அளித்ததனைக் கொண்டு அது முதலாளியாக (இனிவரும் பகுதிகளில் 'எம்பிளோயர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு முதலாளி என்ற சொல்லே தமிழிற் பயன்படுத்தப்படுகிறது)க் கடமையாற்றியது எனக் கூறலாமா?
(2) கோயில் நிறுவனம் தன்கீழ் இருந்த தொழிலாளருடன் எத்தகைய தொடர்பைக் கொண்டிருந்தது?
(3) இந்நிறுவனத்திற் பணியாற்றிய தொழிலாளர் அதற்கு எந்தவிதத்திற் பொறுப்புடையராக இருந்தனர்?

இவ்வினாக்களுக்குத் தெளிவான விடைகளைக் கண்டுகொள்ளச் சோழர் காலத்துச் சாசனங்களிற் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. அதுமாத்திரமன்றி இக்காலத்தில் ஒரு முதலாளியாக இருக்கவேண்டியவன் தனக்குக்கீழ் உள்ள உத்தியோகத்தருடன் எவ்வாறு நடக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டான் தனது உத்தியோகத்தரைப் பொறுத்து எத்தகைய அதிகாரத்தைக் கொண்டிருந்தான் என்பன போன்ற அம்சங்களை அறிய முடியவில்லை. இதனால் தற்காலத்தில் 'முதலாளி' என்ற சொல் என்ன கருத்திற் பயன்படுகின்றது? அவனுக்குள்ள அதிகாரங்கள் என்ன? என்பவற்றைக் கவனித்தே சோழப்பெருமன்னர் காலக் கோயில்களின் இது சம்பந்தமான நிலையினை விளங்க வேண்டும். ஆனால் தற்காலத்தில் இருக்கின்ற வழக்கமுறைகள் தான் ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தன என வாதத்திற்கு எடுத்துக் கொள்ளல் அறிவியல் ஆய்வுக்கு எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதும் நோக்கத்தக்கது.

சோழர்காலக் கோயில் நிறுவனம் 'முதலாளி'யாகக் கடமையாற்றியது எனப்பல ஆசிரியர் காலத்துக்குக் காலம் கூறியுள்ளனர் என முன்பு கண்டோம். அவ்வாறு கருத்துத் தெரிவித்த ஆசிரியர்களதும். தமது கருத்துக்கு அடிப்படையாக முதலாளி என்ற சொல்லுக்குச் சோழர் காலத்திற் கொடுக்கப்பட்ட கருத்தை விளக்கித் தம்கருத்தினைத் தெரிவிக்கவில்லை. இதனால், சமகாலச் சான்று கிடையாதபோது இப்பிரச்சினையை ஓரளவுக்காவது திருப்திகரமாக விளக்கிக் கொள்வதற்குத் தற்காலக் கருத்துக்கள் சிலவற்றைப் பயன்படுத்துவதிலே தவறில்லை.

தற்காலத்தில் காணும் அரசையும் பிற நிறுவனங்களையும் எடுத்துக் கொண்டால் அரசின் நேரடிக் கட்டுப்பாடில் இயங்காத நிறுவனங்களிற் பணிசெய்வோருக்கு அந்நிறுவனங்களே முதலாளிகளாக இருக்கின்றன. அதனால அவர்கள் அரச உத்தியோகத்தர் என அழைக்கப்படுவதில்லை. தனியார் நிறுவன உத்தியோகத்தர் என்றே அவர்கள் அழைக்கப்படுவர். அதே நேரத்தில் அரசின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளருக்கு அரசே முதலாளி.9 இதனைத் கொண்டே சோழப் பெருமன்னர் கால இந்து கோயில்களின் நிலையையும் ஆராய வேண்டும்.

கோயில்களுக்கும் மத்தியரசுக்கும் இடையில் இருந்த தொடர்பினை விளக்கும்போது மத்தியரசானது. அரச உத்தியோகத்தர் தர்மாசனத்தார், சபையார் போன்றவர்களின் மூலமாகக் கோயில் நிறுவனத்துடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தமையை அறியலாம். சோழர்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது போன்ற இறுக்கமான மத்தியமயமாக்கப்பட்ட ஓர் அரசு தமிழ்நாட்டில் மத்திய காலப்பகுதியில் என்றும் ஏற்படுத்தப்படவில்லை. ஏனைய சமகால அரசுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போதும் சோழப்பேரரசின் நிர்வாக முறை தனித்தன்மை பெறுகின்றது. இத்தகைய ஒரு இறுக்கமான அமைப்பிலே நாட்டில் இருந்த எல்லா நிறுவனங்களிலும் அரசின் நேரடி நிறுவனங்களாகக் காணப்பட்டன. இதனாற் போதும் முதலாம் ராஜராஜனின் நடவடிக்கைகள் பற்றிக் கவனிக்கையில் நீலகண்ட சாஸ்திரி அவர்கள்.

> ''ராஜராஜனின் ஆட்சி பற்றி நாம் அறிவதெல்லாம் அவனின் சக்திவாய்ந்த ஆளுமையையும் புத்தியின் இறுக்கமான பிடியையும் உறுதிப்படுத்துகின்றன. அவனின் புத்தியின் இறுக்கமான பிடியானது பார்வையிலிருந்து எதுவும் தப்பிச் செல்லவில்லை'' எனக் கூறியுள்ளர்.10

இவ்வாறு மத்தியரசின் நேரடியான ஆதிக்கத்தின்கீழ் விளங்கிய நிறுவனங்களுள் ஒன்றே கோயில் நிறுவனமுமாகும் கோயில்களின் நிர்வாக விடயங்களில், மத்தியரசு கொண்டிருந்த தலையீடுகள் பற்றி அடிக்கடி நமக்குக் கிடைக்கும் சாசன குறிப்புக்களும் மத்தியரசின் நேரடிக் கண்காணிப்பிற் கோயில்கள் இருந்தமையையறிய உதவுகின்றன.

## III பணியாளரை அரசே நியமித்தது :-

கோயிற்பணியாட்களின் நியமனம் சம்பந்தமாக அரசன் குறிப்பிடத்தக்க அதிகாரமுடையவனாக விளங்கினான். கோயில் நிறுவனத்துக்கான பணியாட்களை அரசனே நியமித்தான். இது சம்பந்தமாகத் தஞ்சாவூர்ச் சாசனங்கள் தருகின்ற தகவல்கள் கவனித்தற் பாலன. ஏறத்தாழ நூற்று நாற்பதுக்கு மேலான கிராமச் சபையினர் அரசன் ஆணையை நிறைவேற்றுவதற்காகக் கணக்கர் பொருளாளர் உட்பட நூற்றைம்பதுக்கு மேலான பணியாட்களைத் தஞ்சாவூர்க் கோயிலில் நியமித்தனர். அவர்களிற் சிலரை இங்கு குறிப்பிடலாம்''11

| சபை இருந்த இடம் | நாடு | நியமிக்கப்பட்டோர் |
|---|---|---|
| 1. மங்கலம் | மங்கலநாடு | 1 பொருளாளன்<br>1 பணியாளன் |

| | | |
|---|---|---|
| 2. மதனமஞ்சரி | நெண்மலிநாடு | 2 பணியாளர் |
| 3. குன்றியூர் | ,, | 1 பணியாளர் |
| 4. சூரன்குடி | ,, | ,, |
| 5. சூரத்தூர் | ,, | ,, |
| 6. பல்லவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் | புரன்கரம்பை நாடு | ,, |
| 7. செம்பியன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம் | ,, | 2 பணியாளர் |
| 8. பெரும்பலமருதூர் | ,, | 1 பணியாளார் |
| 9. களப்பார் | ,, | 1 ,, |
| 10 சிங்களாந்தகச்சதுர்வேதிமங்கலம் | ,, | 1 ,, |
| 11. அருள்மொழிதேவச் சதுர்வேதி மங்கலம் | | 2 ,, |
| 12. செறுபத்தூர் | | 1 ,, |
| 13. ஆர்வலம் | ஆர்வலங்கூற்றம் | 2 ,, |
| 14. மும்முடிச் சோர்ச் சதுர்வேதி மங்கலம் | திருநாரையூர் நாடு | 1 சரணத்தா<br>1 பணியாளர்<br>1 கிழ்க்காரணத்தார் |
| 15. ராஜஸ்றய சதுர்வேதி மங்களம் | உறையூர்க் கூற்றம் | 1 கணக்காள்<br>1 பணியாளர் |
| 16. ஜனநாத சதுர்வேதி மங்களம் | முடிச்சோணுடு | 2 பணியாளர்<br>1 கணக்கன்<br>2 கிழ்க்கணக்கர் |

இதே இடத்தைச் சேர்ந்த இன்ஞேர் சாசனம் பல்வேறு இடங்களேயும் சேர்ந்த கிராமச் சபையினரைக் கோயிலுக்குத் காவலாளிகளே நியமிக்குமாறு அரசன் பணித்தமையையும் சபையினர் அவ்வாறு செய்தமையையும் கூறுகின்றது.[12]

| சபை அல்லது கிராமம் | கூற்றம் | நியமிக்கப்பட்டோர் |
|---|---|---|
| 1. ராஜராஜச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் | உறையூர் | 2 காவலாளிகள் |
| 2. அறிஞ்சிகை சதுர்வேதி மங்கலம் | ,, | 1 ,, |
| 3. வயலூர் | ,, | 1 ,, |
| 4. கருப்பூர் | ,, | 1 ,, |
| 5. | தண்டலே | 1 ,, |
| ...த்தமசீலி சதுர்வேதி மங்கலம் | விளநாடு | 1 ,, |
| ...யாற்று மங்கலம் | இடையாற்று நாடு | 1 ,, |
| ...வின்மாதேவிச்சதுர்வேதிமங்களம் | நல்லூர் நாடு | 1 ,, |
| ...கமஹாசேவிச்சதுர்வேதிமங்கலம் | விளநாடு | 1 ,, |
| ...ந்தவை நல்லூர் | காராம்பை நாடு | 1 ,, |
| ...பருமிலத்தார் | கிரைக் கூற்றம் | 1 ,, |
| ... மனுகுலசூழாமணிச் சதுர்வேதி மங்கலம் | ஆலூர்க்கூற்றம் | 1 ,, |
| 13. விளத்தூர் | ,, | 1 ,, |
| 14. ஜனநாத சதுர்வேதி மங்கலம் | முடிச்சோணுடு | 1 ,, |
| 15 பரமேஸ்வர சதுர்வேதி மங்கலம் | ,, | 1 ,, |
| 16. உலகமஹாதேவிச்சதுர்வேதிமங்கலம் | வெண்ணிகூற்றும் | 1 ,, |
| 17. அவனிகேசரி சதுர்வேதி மங்கலம் | | 1 ,, |
| 18. பெருநங்கை மங்கலம் | | 1 ,, |
| 19. சிற்றும்பர் | பாம்பணி கூற்றம் | 1 ,, |

இவ்வாறு மேலே கவனித்த பல்வேறு இடங்களேயும் சேர்ந்த கிராமச் சபையினர் அரச உத்தரவினுலே தஞ்சாவூர்க் கோயிலுக்குப் பணியாளரை நியமித்தமையை அறியலாம். இது மாத்திரமன்றி முதலாம் ராஜராஜன் தமிழ் நாட்டின் பல்

வேறு கோயில்களுக்கும் சேர்ந்திருந்த நடனமாதர்களைத் தஞ்சாவூர்க் கோயிலிற் பணி புரிவதற்காக அக்கோயிலுக்கு மாற்றி அக்கோயிலை அண்டிய பகுதிகளில் அவர்களைக் குடியேற்றினன் என அறியலாம்[13] கோயிலுக்கு நடன மாதர் தேவைப் பட்டபோது அத்தேவை அரசனாற் பூர்த்தி செய்யப்பட்டமையையே இது குறிக்கின்றது. முதலாம் ராஜேந்திரனின் முப்பதாம் ஆண்டுக்குரியதும் கண்டியூரிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயிலுக்குச் சேர்ந்ததுமான சாசனமொன்று, ஒரு நடன ஆசிரியர் இறந்தபோது இறந்தவரின் இடத்திற்கு அவரின் உறவினர் ஒருவர் அரசனால் நியமிக்கப்பட்டார் எனக் கூறுகிறது.[14] பரகேசரி வர்மன் ராஜேந்திரதேவனின் இருபதாம் ஆண்டுக்குரியதும் நங்காவரம் என்ற இடத்திலுள்ள சுந்தரேஸ்வரர் கோயிலிலிருந்து கிடைப்பதுமான சாசனமொன்று கோயில் ஒன்றைச் சேர்ந்த தவில் அடிப்போர்களில் இருவரை அரசன் பதவியிலிருந்தும் நீக்கிவிட்டு அவர்களின் இடத்துக்குப் புதிதாக ஒருவனை நியமித்தமை பற்றித் தெரிவிக்கின்றது.[15] அரசின் உள்ளூர் நிறுவனங்களுள் ஒன்றான ஊரும் கோயிற் பணியாளரின் நியமனத்திற் பங்கு கொண்டிருந்தமையை அறியலாம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கிடைக்கும் முதலாம் ராஜேந்திர சோழனின் ஏழாம் ஆண்டுக்குரிய சாசனமொன்று, கோயிற் காவற்காரன் ஒருவனின் பராமரிப்புக்காக ஜீவிதமாகக் கொடுக்கப்பட்ட நிலம் பற்றிக் குறிப்பிடுகையில் அக்காவற்காரன் ஊராரினால் நியமிக்கப்பட்டான் எனக் குறிப்பிடுகின்றது.

> ''இத் திருவெரும்பியூர் ஆழ்வார்க்குத் திருமெய்க்காப்பாக இழிவு பெற்றுக் குர்யான் எங்களிலொருவனை சந்திராதித்தவற்றிரு மெய்காப்பு இடுவதாகவும் இட்ட திருமெய்க்காப்பானுக்கு ஜீவிதமாக நாங்கள் எங்களூர் செய்து குடுத்த''16

கோயில் நிறுவனத்திற் பணியாற்றிய பலதரப்பட்ட பணியாட்களின் நியமனமும் அரசனால் நேரடியாகவோ அவனது பிரதிநிதிகளின் மூலமோ செய்யப்பட்டது எனக் கூற மேற்கண்ட சான்றுகள் உதவுகின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது கோயில் நிறுவன நிர்வாக அதிகாரிகளில் எவராவது அந்நிறுவனத்திற் சேவை செய்வதற்காக ஒருவனை நியமித்தமைக்குச் சோழப் பெருமன்னர் காலச் சாசனங்களில் இதுவரையிலே தகவல்கள் கிடைக்கவில்லை. கோயிற் பணியாட்களின் நியமனம் பற்றியனவாகக் கிடைக்கும் தகவல்கள் அரசையும் அல்லது அரசின் பிரதிநிதிகளையும் அந்நியமனங்களையும் தொடர்புபடுத்துவனவாகவே உள்ளன. இதனால் அரசர் அல்லது. அரசரின் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் கோயிற் பணியாளரின் நியமனத்தைச் செய்தனர் என வேண்டும்.

இக் காலத்தில் விரிவான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்... சன மாத்திரமன்றிச் சமயக் கடமைகளோடு பலதரப்பட்ட உலகியற் கட... தமையை கோயில் நிறுவனம் செய்து வந்தமையாலே தனது கடமைகளை இலகுவா... காகக் கோயிற் பணியாட்களின் நியமனம் சம்பந்தமான கடமைகளை இ... டமே அரசின் பிற நிறுவனங்களிடமோ ஒப்படைத்திருக்கலாம் என எண்ணத்... றும். ஆனால் இக்காலக் கோயில் நிறுவனத்துக்கும் அரசுக்கும் இருந்த தொட... களை நோக்கும் போது இக்கருத்துப் பொருந்துவதாக இல்லை. இக்காலத் கோயில் நிறுவனம் அரசின் ஆதிக்கத்துக்குட்பட்ட நிறுவனமாக இயங்கியது. 17 இதனால் கோயில் நிறுவனத்தின் சார்பில் அரசன் கோயிற் பணியாட்களை நியமித்தான் எனக் கொள்ளாது தனிக்கட்டுப்பாட்டில் இருந்த ஒரு நிறுவனத்திற்கான பணியாட்களை அரசன் தானே நியமித்தான் என்பது பொருத்தமானது.

## III. பணியாளர் மீது அரச அதிகாரம்:

கோயில் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாட்களை நியமித்தமை மாத்திரமன்றி அவர்கள்மீது அதிகாரம் செலுத்தும் உரிமையும் அரசன் அல்லது அவனின் பிரதிநிதிகள் பெற்றிருந்தனர். முன்னர் கவனித்த நங்காவரம் என்ற இடத்திலுள்ள சுந்தரேஸ்வரர் கோயிலிலிருந்து கிடைக்கும் பரகேசரிவர்மன் ராஜேந்திரசோழனின்

சாசனம் கோயிலைச் சேர்ந்த தவில் அடிப்போர்களில் இருவரை அரசன் பதவி நீக்கம் செய்தனர் எனக் குறிப்பிடுகின்றது.[18] கோயிற் பணியாட்களுக்கும் அரசுக்கும் இடையில் இருந்த தொடர்பை அறிய இது உதவும். கோயிற் பணியாட்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமையை அரசப் பிரதிநிதிகளும் பெற்றிருந்தனர். முதலாம் ராஜராஜனின் ஏழாம் ஆண்டுக்குரிய சாசனம் விஜய மங்கலத்தைச் சேர்ந்த செத்தப் போசன் வெண்ணைய இராம விட்டன் என்ற அதிகாரி கோவிந்தப்புத்தூரிலுள்ள கோயில் நிர்வாகியாக நியமிக்கப்பட்டான் என்றும் அக்கோயிலைச் சேர்ந்த பணியாட்கள்மீது அதிகாரம் செலுத்துவதற்கு உரிமை அளிக்கப்பட்டான் என்றும் கூறும்[19] அதாவது தனது அதிகாரத்தை எதிர்த்த வெள்ளாள வேலையாட்களை பதவியிலிருந்து நீக்கவும் தனது அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மறுத்த பிராமணர்களுக்கு இருபத்தைந்து பொன் காசு அபாரதம் விதிக்கவும் உரிமையுடையவனாக இருந்தான். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள காரூர் தாலுகாவைச் சேர்ந்த கோமூரில் இருந்து கிடைக்கும் முதலாம் ராஜராஜனின் பதினேழாம் ஆண்டுக்குரிய சாசனம் தேவன பள்ளி என்ற இடத்துக் கோயிலின் நிர்வாகம் பற்றிய விசாரணை நடத்திய அரச உத்தியோகத்தன், கோயிற்பணியாளர் சிலர் தவறு விட்டபோது அவர்களிடமிருந்து குற்றப்பணம் அறவிடும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான் எனக் குறிப்பிடுகின்றது.[20]

அரச உத்தியோகத்தர் மாத்திரமன்றி மத்தியரசின் இன்னோர் நிறுவனமான கிராமச்சபையும் கோயிற் பணியாளர்மீது அதிகாரம் பெற்றிருந்தமையை அறியலாம் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணம் தாலுகாவைச் சேர்ந்த காவேரிப்பாக்கம் என்ற இடத்திலிருந்து கிடைப்பதும் முதலாம் ராஜராஜனின் காலத்துக்குரியதாகக் கொள்ளப்படுவதுமான சாசனம் தரும் செய்தி நோக்கற்பாலது[21] அரசன் விடுத்த உத்தரவைத் தொடர்ந்து ஊர்வாரியப் பெருமக்களும் உதானை வாரியப் பெருமக்களும், ஏரிவாரியப் பெருமக்களும், கழனி வாரியப் பெருமக்களும் விவிஸ்தர்களும் உளளிட்ட அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் கோயில் விழாக்களிற் பெண்கள் சிலர் செய்து வந்த சேவையைத் தடை செய்தனர் என அச்செய்தியினால் அறியலாம். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் தாலுகாவைச் சேர்ந்த திருககோடி காவல் என்ற இடத்துச் சாசனம் அதே கிராமத்தைச் சேர்ந்த சபையும் கோயிலைச் சேர்ந்த மஹேஸ்வரரும் ஒன்று சேர்ந்து, கோயில் நிலங்களில் சில எவ்வாறு நீர்ப்பாச்சப்படவேண்டும். என்பது குறித்துக் கோயிற் பணியாட்களுக்குப் போதனை அளித்தமை பற்றிக் கூறுகிறது.[22] சிறிய விடயங்களிற்கூட சபையின் உதவியுடனேயே கோயில் அதிகாரிகள் கோயிற் பணியாளருடன் அதிகாரரீதியாகத் தொடர்பு கொள்ள முடிந்தது என இதிலிருந்து அறியலாம்.

...னவே, கோயிற் பணியாளரின் நியமனத்தில் மாத்திரமன்றி அப்பணியாள... காரம் செலுத்துவதிலும் அரசும் அரசப்பிரதிநிதிகளுமே உரிமை பெற்றி...ர் எனக் கூறவேண்டும். இதனைத்தவிர சில சந்தர்ப்பங்களிற் கோயிற் பணி... தவறிழைத்தபோது அத்தவறு பற்றிய விடயம் அரசினதோ, அரச உத்தி...யாகத்தரினதோ கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கான சான்றைச் சமகாலச் சாசனங்களிற் பெற முடியாவிட்டாலும் சிறிது பிற்பட்டகாலச் சாசனங்களிலிருந்து பெறலாம். பதின்மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த முதலாம் மாறவர்மன் குலசேகரனின் (1268–1310) காலத்துச் சாசனம் இத்தகவலைத் தருகின்றது.[23] கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடையவராக இருந்த ஒருவர் வெளிநாட்டிலிருந்து ஒரு பிராமண விதவையை அழைத்து வந்து அவளைத் தனது மனைவியாக்க விரும்பினர். அச்செயல் பிராமண ஆதிக்கத்திற் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதொன்ருக இருந்தமையால் அது அரசனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இச்சம்பவம் நடைபெற்ற காலம் இரண்டாம் பாண்டியப் பேரரசின் வளச்சியின் உச்சக்காலமாகும். அக்காலத்தில். மத்தியரசின் நிர்வாகம் பன்முகப்பட்டிருந்தது. ஐந்து சகோதர அரசர்கள் பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் தனியதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தனர். இவ்வாறு பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சி நிலவிய இரண்டாம் பாண்டியப் பேரரசுக்காலத்திலேயே கோயிற் பணியாளரின் நடவடிக்கை அரசின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தமையால்

சோழர் காலத்தில் மிக இறுக்கமாக மத்தியமயமாக்கப்பட்ட அரச அமைப்பிற் கோயிற்பணியாளரின் நடவடிக்கைகள் முற்றாக அரசின் ஆதிக்கத்துக்குட்பட்டவை யாக இருந்திருக்கு மெனலாம்.

இதுவரை கவனித்தவற்றைத் தொகுத்து நோக்கலாம். இக்கால இந்துக் கோயில்களிற் கடமையாற்றிய பணியாளர் அவ்வக்காலப்பகுதியில் ஆட்சி செய்த அரசரால் அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்டனர். அத்துடன் கோயிற்பணியாட்களைப் பதவி நீக்கம் செய்வதிலோ அவர்களுக்குத்தண்டனை விதித்து அவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதிலோ அரசன் அரச உத்தியோகத் தர், உள்ளூர்ச் சபையார் ஆகியோர் அதிகாரமுடையவராக விளங்கினர். சில சம யங்களிற் கோயிலைச் சேர்ந்த மஹேஸ்வரர் குற்றவாளிகளிடமிருந்து குற்றப்பணம் பெறும் அதிகாரம் பெற்றிருந்தனர். எனினும் அவ்வதிகாரம் அவர்களுக்குரிய தொன்றாக இருந்திருக்கவில்லை என்றும் சில வசதிகளையொட்டி அவ்வதிகாரம் அவர்களுக்குச் சிறப்பாக அளிக்கப்பட்டதெனவும் அறியலாம்.24 மேலும் கோயிற் பணியாளர் தவறிழைத்த காலங்களில் அத்தவறு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றிலிருந்து கோயில் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் பத்தி யரசுக்கே பொறுப்பாக இருந்தனர் எனக் கூறலாமேயன்றிக் கோயில் நிறுவனத் துக்குப் பொறுப்பாக இருந்தனர் எனக் கூற முடியாது. இதனால் இக்கால இந்துக் கோயில் நிறுவனம் பல தொழிலாளர்களுக்குத் தொழில் வசதி கொடுக்கும் ஒன்றாக விளங்கியதேயன்றி அங்கு கடமையாற்றிய பணியாளர்மீது அதிகாரம் செலுத்தி வேலைவாங்கும் 'முதலாளியாக' விளங்கியது எனக் கூறுதல் தவறாகும்.

## குறிப்புகள் :-


1. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு : செ. குணசிங்கம், சோழ இராச்சியத்து இந்துக் கோயில்களின் அமைப்பும் பணிகளும் (ஏறத்தாழ கி. பி. 850 முதல் 1070 வரை), இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகக் கலாநிதிப் பட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, பேராதனை (பதிப்பிக்கப் படாதது)

2. **South Indian Inscriptions** (SII), 11, No. 66; A. Appadurai, Madras University Historical Series No. 12, 1, (Madras, 1936), pp. 275 — 76.

3. S S I, III. pt III, No. 128

4. Ibid , XIII, No. 170 (103 of 1926)

5. ARE for 1917 – 18, pt. III, para 28, pp 145 – 46

6. **Epigraphiae Indica** (EL, XXI, No. 38

7. K. A. Nilakanta Sastri, **The Colas**, Madras, University Historical Series — No. 9, Second edition, (Madras 1955), p. 654.

8. A. Appadurai, **Op.Cit**, 1, p. 275, K. A. Nilakanta Sastri, Ibid; p. 654; T. V. Mahalingam, **South Indian Polity**, Madras University Historical Series, No. 2, Second edition, (Madras 1967), p. 34; R. Nagaswarmy, 'South Indian Temple as an Employer', **The Indian Economic and Social History Review, II** No. 4, (October 1965), pp. 367–72

9. W. E. M. Abeysekera, **Law of Industrial Together with Supreme Court Judgements**, (Colombo, 1963), p. 3

## உசாத்துணை நூல்கள்


1. Barry. R. G. Chorley R. J, **Atmosphere Weather and Climate**, London, 1968
2. Crowe P. R., **Concepts in Climatology**, Longman, London, 1971.
3. Chorley R J, Kennedy B.A. **Physical Geography A system - approach**, Prentice – Hall, London, 1971.
4. Stringer E. T., **Techniques of Climatology**, San Francisco, U.S.A. 1972.
5. Watts D., **Principles of Bio Geography**, Mc Graw-Hill, Great Britain, 1971.
6. புஷ்க்கோவ் என். வி, சில்கின் பி. ஐ. **அமைதிக் கதிரவன்**, (தமிழாக்கம் – கறுப்பண்ணன் T.A.), சென்னை 2, 1973.
7. விசுவநாதன் ஆர். கே, **வானக் காட்சி**, சென்னை 4, 1958.
8. கெண்ட்ரூ W. G., **காலநிலையியல்** (இரண்டாம் பாகம்) (தமிழாக்கம் கொ. சேஷ. நரசிம்மன்) சென்னை. 1965.
9. சேர் ஜேம்ஸ் ஜீன்ஸ், **நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்** (தமிழாக்கம் லட்சுமி நரசிம்மன் தி. வி.) சென்னை. 5, 1965.
10. Lamb. H. H, **Climate Present, Past and Future – Vol. 1**, Methuen & Co. Ltd, London, 1972.
11. ஸ்வர் பெட்டர்ஸன், **வளியியலுக்கு ஓர் அறிமுகம்**, (தமிழாக்கம் கோ. இராமசாமி,) தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு, 1965